## 34

# திறவுகோல் வார்த்தைகளும் சொற்றொடர்களும்

*கிறிஸ்துவின் வரலாற்றை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள திறவுகோல் வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களினூடே சிந்திப்பதன்மூலம் நாம் கிறிஸ்தவத்தின் முழுமைத்தன்மையைச் சுலபமாய் மறுகண்ணோட்டமிட முடியும்.*

*தேவத்துவம்:* "தேவன்" என்ற பெயர் தெய்வீகக் குடும்பப்பெயர் என்ற வகையில் நினைக்கப்படலாம். தேவத்துவம், அல்லது திரித்துவம் என்பது, பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் (இயேசு), மற்றும் ஆவியான வராகிய தேவன் ஆகியோரை கொண்டதாக உள்ளது. சாராம்சத்திலும் நோக்கத்திலும் தேவன் ஒருவராக இருக்கிறார், ஆனால் நபர்த்துவத்திலும், செயல்படுதலிலும் அவர் மூவராக இருக்கிறார் (2 கொரிந்தியர் 13:14ஐக் காணவும்). உதாரணமாக, இயேசுவின் ஞானஸ்நானத்தில், இயேசு ஞானஸ் நானம் பெற்றார், பிதாவாகிய தேவன் பரலோகத்திலிருந்து பேசினார், பரிசுத்த ஆவியானவர் புறா வடிவத்தில் இயேசுவின் மீது இறங்கினார் (மத்தேயு 3:16, 17). நடபடிகள் 17:29; ரோமர் 1:20; கொலோசெயர் 2:9ஐக் காணவும்.

*பரிசுத்த வசனங்கள்:* வேதாகமம் அறுபத்தியாறு புத்தகங்களைக் கொண் டுள்ளது (பழைய ஏற்பாட்டில் முப்பத்தி ஒன்பதும் புதிய ஏற்பாட்டில் இருபத்தியேழும்), இவைகள் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதல் மற்றும் மேற்பார்வை ஆகியவற்றினால் நமக்குத் தரப்பட்டன. இவைகள் தேவனு டைய பிள்ளைகளாக விரும்புபவர்களிடம் தேவன் செய்துள்ளவை, செய்து கொண்டிருப்பவை, மற்றும் செய்ய விருப்பவை ஆகியவற்றைச் சித்தரிக்கின்றன. பழைய ஏற்பாடு பெரும்பாலும் தெய்வீக வரலாறாக இருக்கையில், புதிய ஏற்பாடு கிறிஸ்தவ யுகத்திற்கான இயேசுகிறிஸ்துவின் புதிய உயிலாகவும் உடன்படிக்கையாகவும் உள்ளது. 2 தீமோத்தேயு 3:16, 17; 2 பேதுரு 1:20, 21 ஆகியவற்றைக் காணவும்.

*திரு அவதாரம்:* தேவத்துவத்தில் இரண்டாவது உறுப்பினரான இயேசு, உண்மையாகவே ஒரு மனிதராகி நம்மிடையே வாழ்ந்தார். அவர் தேவன் அனுப்புவதாக வாக்குத்தத்தம் பண்ணிய மேசியாவாக இருக்கிறார். அவர் தேவகுமாரன் என்ற தமது அடையாளத்தை விட்டுவிடாது, பரலோகத்தை விட்டுப் புறப்பட்டு வந்து மனிதரானார். அவர் முற்றிலும் தேவனாகவும்,

முற்றிலும் மனிதராகவும் இருந்தார். தேவ மனிதர் தாம் உலகத்தின் எல்லாக் குற்றச் சுமையையும் சுமக்க முடியும். யோவான் 1:14; பிலிப்பியர் 2:5:8ஐக் காணவும்.

*யோவான் ஸ்நானன்:* தேவன் இம்மனிதரை மேசியாவின் வருகையை அறிவிப்பதற்காகத் தனிப்படுத்தினார். யோவானுடைய பிரசங்கத்தின் மூலம் தேவன், இயேசுவின் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்தினார். யோவான் தாமே இயேசுவை மேசியா என்று அடையாளப்படுத்தினார். மத்தேயு 3:1-12; மாற்கு 1:1-8; லூக்கா 3:1-20; யோவான் 1:29ஐக்காணவும்.

*இயேசு பூமியில் செய்த ஊழியம்:* இயேசு தமது முப்பதாம் வயதில், இப்பூமியில் ஊழியத்தைத் தொடங்கினார். மூன்றுக்கும் சற்று அதிக மான ஆண்டுகளாக அவர் வரவிருந்த தமது இராஜ்யத்திற்கும், நமது பாவங்களுக்கான அவரது மரணத்திற்கும் அஸ்திபாரமிட்டார். இந்த வேளையில், அவர் இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார், வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தினார், மற்றும் தேவன் எவ்வாறு இருக்கிறார் என்பதைச் செயல் விளக்கப்படுத்தினார். மத்தேயு 4:17; 11:4-6; மாற்கு 1:14, 15ஐக் காணவும்.

*அற்புதங்கள்:* இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்கள் "அற்புதங்கள்," "அடையாளங்கள்," மற்றும் "பலத்த செய்கைகள்" என்று குறிப்பிடப் பட்டன. அவைகள் இயேசு கொண்டிருந்த தெய்வீக வல்லமையை உறுதிப் படுத்தின. அவர் மரித்தோரை உயிர்ப்பித்தார், பார்வை இழந்தவர்களுக்குப் பார்வையை மீட்டுக் கொடுத்தார், அசுத்த ஆவிகளைத் துரத்தினார், மற்றும் பல அற்புதங்களை நிகழ்த்தினார். இயேசுவினால், அவரது அப்போஸ்தலர் களினால், அல்லது முதல்நூற்றாண்டில் வாழ்ந்திருந்த ஏவுதல் பெற்ற பிற மனிதர்களினால் செய்யப்பட்ட அற்புதங்களை எவரொருவரும் மறுக்க வில்லை. யோவான் 20:30, 31; எபிரெயர் 2:3, 4 ஆகியவற்றைக் காணவும்.

*(பாடுகள் பற்றிய முன்னறிவிப்பான) தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம்:* இயேசு தமக்கு வரவிருந்த பாடுகள் மற்றும் சிலுவை மரணம் ஆகியவை பற்றி அடிக்கடி முன்னுரைத்தார். அவர் உலகத்தின் இரட்சிப்புக்காகத் தாம் அனுபவிக்கப்போகும் விஷயங்கள் பற்றிய விவரங்களைக் கொடுத்தார். மத்தேயு 16:21-23; 20:18, 19ஐக் காணவும்.

*கர்த்தருடைய இராப்போஜனம்:* இயேசு தாம் கைதாகவிருந்த இரவில் தமது அப்போஸ்தலர்களுடன் பஸ்காவைப் புசிக்கையில், புளிப்பில்லாத அப்பம், திராட்சரசம் ஆகியவற்றைக் கொண்டு ஒரு இராப்போஜனத்தை ஏற்படுத்தி, அதைக் கடைப்பிடிக்கும்படி, தம்மைப் பின்பற்றுபவர்களைக் கேட்டுக் கொண்டார் (மத்தேயு 26:26-29; மாற்கு 14:22-25; லூக்கா 22:19, 20). அதை அவரது பின்பற்றாளர்கள் முறையாக உண்டனர் என்பதைப் புதிய ஏற்பாடு சுட்டிக்காண்பிக்கிறது. ஆதி கிறிஸ்தவர்கள் ஆராதனைக்குக்

கூடிய, வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமை ஒவ்வொன்றிலும் இது செய்யப்பட்டது (நடபடிகள் 20:7). இந்த ஊழியத்தில், அவர்கள் தேவனைத் துதித்துப் பாடினர், ஜெபித்தனர், இந்த இராப்போஜனத்தில் பங்கேற்றனர், அவரது வசனத்தை ஆழ்ந்து சிந்தித்தனர், மற்றும் நற்காரியங்களுக்காகப் பணத்தைச் சேகரித்தனர்.

*கெத்செமனே:* இயேசு எருசலேமில் இருந்தவேளையில் ஜெபிப்பதற்காக அடிக்கடி இந்தத் தோட்டத்திற்குச் சென்றார். அவரது சிலுவை மரணத்திற்கு முன்பு, ஜெபிப்பதற்காகவும், உலகத்தின் பாவங்களுக்காக மரிப்பதற்கான தமது திட்டங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும் அங்கு சென்றார். கெத்செமனேயில் அவரது ஜெபங்கள், ஜெபிக்கப்பட்டவற்றிலேயே மாபெரும் ஜெபங்களாக உள்ளன. மத்தேயு 26:36-46; மாற்கு 14:32-42; லூக்கா 22:39-46ஐக் காணவும்.

*யூதர்களின் விசாரணை:* ரோமாபுரி யூதர்களுக்கு, "உங்கள் சொந்த மக்களை நீங்களே (விசாரணை செய்து) நியாயந்தீர்க்கலாம், ஆனால் அவர்கள் உங்கள் தேவாலயத்தை மீறியிருந்தாலன்றி நீங்கள் அவர்களை மரணத்திற்கு உட்படுத்தக் கூடாது. உங்கள் தேவாலயத்தை மீறியிராத யாருக்கேனும் நீங்கள் மரண தண்டனை தர நாடினால், அதைச் செயல்படுத்த நீங்கள் எங்களுடைய ஒப்புதலைப் பெற வேண்டும்" என்று கூறியிருந்தது. எனவே, யூதர்கள் இயேசுவை முதலாவதாக - அன்னா, காய்பா, மற்றும் சனதெரீன் சங்கத்தார் என்ற - யூதத்தலைவர்களிடம் இட்டுச் சென்றனர், அவர்கள் ரோம அதிகாரிகளிடம் முன் வைக்கக்கூடியதான வழக்கு ஒன்றை இயேசுவுக்கு எதிராக ஒன்றுகூடி ஏற்படுத்துவதற்காக இதைச் செய்தனர். அவர்கள் தங்களுடன் ரோமாபுரியானது கருத்தொருமிக்க வேண்டும் என்றும் இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டும் என்றும் வலியுறுத்தினர். அன்னா பற்றிய விஷயங்களுக்கு, யோவான் 18:12, 13, 19-23ஐக் காணவும்; காய்பா பற்றிய விஷயங்களுக்கு, மத்தேயு 26:57; யோவான் 18:14, 24ஐக் காணவும்; சனதெரீன் (ஆலோசனைச் சங்கத்தார்) பற்றிய விஷயங்களுக்கு, மத்தேயு 26:59-68; 27:1, 2; மாற்கு 14:53-65; 15:1; லூக்கா 22:66-23:1ஐக் காணவும்.

*ரோம விசாரணைகள்:* யூதர்கள் இயேசுவை, ரோமாபுரியின் பிரதிநிதியாயிருந்த பிலாத்துவினிடம் இட்டுச் சென்றனர். பிலாத்து இந்த வழக்கை ஒப்புக்கொள்ளவில்லை, ஆனால் அவர் கலகம் ஒன்று எழுவதை விரும்பாதிருந்தார். அவர் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டார், கடைசியில் அவர்களின் வேண்டுகோளை ஏற்று தமது நிலையை விட்டுக் கொடுத்தார். பிலாத்துவின் முன்பாக முதல் விசாரணைக்கு, லூக்கா 23:1-7ஐக் காணவும்; ஏரோதுவுக்கு, லூக்கா 23:8-11ஐக் காணவும்; பிலாத்துவின் முன்னால் இரண்டாம் விசாரணைக்கு, லூக்கா 23:11-25ஐக் காணவும்.

*சிலுவையில் அறையப்படுதல்:* குற்றவாளி ஒருவரை ஒரு சிலுவை, அல்லது ஒரு மரத்தில் ஆணியால் அடித்துப் பிணைத்து, அவர் மரணம் அடையும்

வரையில் அப்படியே விட்டு விடுதல் என்ற இந்தத் தண்டனை முறையானது மிகவும் கொடூரமான வகையாக இருந்தது (கலாத்தியர் 3:13). சிலரது விஷயங்களில் (இவ்வாறு) துன்புறுதல் என்பது சிலநாட்களுக்கு நீடிக்கக் கூடியதாக இருந்தது. ரோமக்குடிமகனாக இருந்த எவரொருவரையும், சவுக்கால் அடித்தல் அல்லது சிலுவையில் அறைதல் கூடாததாயிருந்தது. யூதர்கள் யாருக்கேனும் மரணதண்டனை நிறைவேற்ற வேண்டுமென்றால், கற்களையே தங்கள் ஆயுதங்களாகப் பயன்படுத்துவார்கள்; ஆனால் இயேசுவின் விஷயத்தில் அவர்கள் சிலுவையில் அறையப்படுதலை வேண்டிக்கேட்டனர். மத்தேயு 27:33-54; மாற்கு 15:20-39; லூக்கா 23:32-47; யோவான் 19:17-30ஐக் காணவும்.

*உயிர்த்தெழுதல்:* (வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, மற்றும் ஞாயிற்றுக் கிழமை என்ற) மூன்று நாட்களின் பகுதிகளில் கல்லறையில் இருந்தபின்பு இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தார், அதன்மூலம் அவர் மரணத்தின் மீது தாம் வல்லமை கொண்டிருந்ததைச் செயல்விளக்கப்படுத்தினார். அவரது அற்புதமான உயிர்த்தெழுதல், அவர் தேவத்துவத்தில் இரண்டாம் உறுப்பினராக இருப்பதைச் சுட்டிக்காண்பித்தது. மத்தேயு 28; மாற்கு 16; லூக்கா 24; யோவான் 20; 21 ஆகிய அதிகாரங்களைக் காணவும்.

*பரத்துக்கேறுதல்:* இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு நாற்பது நாட்களுக்குப் பின்பு, அவர் பரலோகத்திற்கு எழுந்தருளிச் சென்றார். அவர் மேகங்களுடன்கூட பிதாவின் அண்டைக்கு எழுந்தருளிய வேளையில் அவ்விடத்தில் (ஒலிவ மலையில்) அப்போஸ்தலர்கள் இருந்தனர். காலங்களின் முடிவில் அவர் அவ்வாறே திரும்பவும் வருவார் என்று வேத வசனங்கள் அறிவிக்கின்றன (மத்தேயு 26:64). லூக்கா 24:51; நடபடிகள் 1:9-11 ஆகியவற்றைக் காணவும்.

*பெந்தெகொஸ்தே நாள்:* இயேசு பரத்துக்கேறினபின்பு வந்த பத்தாவது நாள் பெந்தெகொஸ்தே நாளாக இருந்தது. இது யூதர்களின் மூன்று பிரதான பண்டிகைகளில் ஒன்றாக இருந்தது. இந்தநாளில், புதிய உடன்படிக்கையினுடைய வருகையின் அடையாளமாகவும், அப்போஸ்தலர்கள் தேவனுடைய செய்தியை உண்மையுடனும் மிகச்சரியாகவும் அறிவிக்க அவர்களைத் தகுதிப்படுத்தவும், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின்மீது பொழியப்பட்டார். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபோது, மூவாயிரம் பேர் மனந்திரும்பி, தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக ஞானஸ்நானம் பெற்றனர். இந்த நாளில்தான் இயேசு வாக்குத்தத்தம் பண்ணியிருந்த சபை நிலவ வந்தது. அப்போஸ்தலர் 2ஐக் காணவும்.

*விசுவாசம்:* இது இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக் கொள்ளும் எண்ணப்போக்காக, தேவன் கூறியுள்ளவற்றை நம்பும் எண்ணப்போக்காக, மற்றும் நம்பிக்கையுடனும் அன்புடனும் அவரது வார்த்தைகளின்படி செயல்படுதலாக உள்ளது. ரோமர் 10:17; எபிரெயர்

*11:1ஐக் காணவும்.*

*மனந்திரும்புதல்:* பொல்லாங்கு அல்லது பாவம்நிறைந்தது என்று நாம் அறிந்துள்ள நடக்கையை நிறுத்தி, தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படியத் திரும்பும் எண்ணப்போக்கு மனந்திரும்புதலாக உள்ளது. மனம் வருந்தும் இருதயம் கிறிஸ்தவ யுகத்தில் செய்யும்படி தேவன் போதிக்கின்றதை சந்தோஷத்துடனும் உறுதிப்பாட்டுடனும் செய்யும்படி பின்பற்றத் தீர்மானிக்கிறது. *நடபடிகள் 17:30; 1 தெசலோனிக்கேயர் 1:9, 10ஐக் காணவும்.*

*அறிக்கையிடுதல்:* இது இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நாம் நம்புவதை வாய்மொழியாக அறிக்கையிடுவதாகவும், அவரது தெய்வீகத்தை வாழ்வில் செய்முறைப்படுத்திக் காண்பிக்கும் உறுதிப்பாடாகவும் உள்ளது. *மத்தேயு 10:32; ரோமர் 10:10; 1 யோவான் 4:15 ஆகியவற்றைக் காணவும்.*

*ஞானஸ்நானம்:* ஒருவர் பாவமன்னிப்புக்கென்று தண்ணீருக்குள் முழுக் காட்டப்படும்போது, அவர் ஞானஸ்நானம் பெறுகிறார். ஞானஸ்நானம் என்பது விசுவாசத்தின் செயல்பாடாகவும், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மறுகாட்சிப்படுத்துதலாகவும் உள்ளது. இது முழுக்காட்டப்பட்டவரை இயேசு தமது சபையில் சேர்த்துக்கொள்ளும் தருணமாகும். *மத்தேயு 28:19, 20; நடபடிகள் 2:38, 41, 47; ரோமர் 6:3, 4ஐக் காணவும்.*

*சபை:* கிறிஸ்துவின் "சரீரம்" அல்லது கிறிஸ்துவின் "இராஜ்யம்" என்றும் அழைக்கப்படுகிற சபையானது, இரட்சிக்கப்பட்டவர்கள் அடங்கிய கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது. அவரது சரீரம் தேவனை ஆராதித்து இந்தப் பூமியில் அவரது ஊழியத்தைச் செய்கிறது. இயேசு இங்கிருந்தபோது, அவர் பூமிக்கு உரிய தமது ஒரு சரீரத்துடன் தமது ஊழியத்தைச் செய்தார், ஆனால் இப்போது அவர் தமது ஊழியத்தை சபை என்ற தமது ஆவிக்குரிய சரீரத்தின் மூலமாகச் செய்கிறார். *எபேசியர் 1:22, 23; 3:21ஐக் காணவும்.*

*பரிசுத்தமாகுதல்:* கிறிஸ்தவர் தமது ஞானஸ்நானத்தின்போது பரிசுத்தப் படுத்தப்படுகிறார், அல்லது குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தேவனால் பிரித்து வைக்கப்படுகிறார். அவர் இந்த பூமியில் தமது (எஞ்சிய) வாழ்வு முழுவதிலும் இந்தப் பரிசுத்ததன்மையில் தொடர்ந்து வளருகிறார். அவர் தேவனுடைய வசனத்தை படிக்கையில், ஆராதிக்கையில், ஜெபிக்கையில், கொடுக்கையில், மன்னிக்கையில், மற்றும் தமது உதவி பிறருக்குத் தேவைப் படும் வேளையில் உதவுகையில், பரிசுத்தத்திலும் தேவனைப்போல் இன்னும் அதிகமாய் ஆகிறார். *1 கொரிந்தியர் 1:1, 2; நடபடிகள் 20:32; எபிரெயர் 2:11; 10:14ஐக்காணவும்.*